**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 384/2024**

**Prosecution witness : அ.சா.1** **Date : 25.11.2025.**

| Name : பன்னீர்செல்வம் | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் இந்திரா நகரில் குடியிருந்து தேங்காய் உரிக்கும் வேலை செய்கிறேன். கடந்த 2021ம் வருடம் மாலை 6 மணிக்கு நான் என் வீட்டிலிருந்தேன். என் சித்தப்பா ஆறுமுகம் என்பவர் என்வீட்டு ஓரத்தில் உலியை வைத்து தட்டிக் கொண்டிருந்தார். என் குழந்தைக்கு உடல் நிலை சரியில்லாத நிலையில் சத்தம் கேட்டதால் வெளியே சென்று செய்யுமாறு சொன்னேன். அதற்கு என்னிடம் எதிரி தெவிடியா பையா உனக்கு எங்கடா நிலம் உள்ளது என்று சொல்லி திட்டினார். ஆறுமுகம் என்பவர் என்னை கீழே தள்ளிவிட்டு கொராடல் என்னை முதுகில் அடித்துவிட்டார்.

2) என் சின்னம்மா தங்கமணி, சந்திரா ஆகியோர் என்னை பிடித்துக் கொண்டார்கள். சேட்டு சுத்தியால் என் வலது தோள் பட்டையில் அடித்தார். பிறகு நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். பிறகு மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். போலீசார் அங்கு வந்து என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். புகார் வாக்குமூலத்திலுள்ள விவரம் எனக்கு தெரியும். அதிலுள்ள் கையெழுத்து என்னுடையது தான். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். ஆஜர் எதிரிகள் அடித்ததாக சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். என்னிடம் காட்டப்படும் சுத்தி மற்றும் கட்டிங்

பிளேடால் அடித்தார்களா என்றால் சுத்தியால் அடித்தார்கள். ஆனால் கட்டிங் பிளேடால் அடிக்கவில்லை என்று சாட்சி அடையாளம் காட்டினார். சுத்தி **சா.பொ.1** ஆகும். கட்டிங் பிளேடு குறியீடு செய்யப்படவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) நீதிமன்றத்தில் காட்டப்படும் கட்டிங் பிளேடால் எந்த எதிரியும் என்னை அடிக்கவில்லை என்றால் ஆமாம். நான் அடையாளம் காட்டி கட்டிங் பிளேடு சுத்தி அடையாளம் காட்டப்பட்டதா என்றால் இல்லை, பொதுவாக சுத்தி இதுபோன்ற அமைப்பில் தான் இருக்கும் என்றால் ஆமாம். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்று எங்கு வைத்து என்னை விசாரித்தனர் என்றால் மேட்டூர் அரசு மருத்துவமனையில் 20 லிருந்து 25 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். அப்போது வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். 20 லிருந்து 25 நாட்களுக்கு முன்னரோ, போலீசார் விசாரித்ததற்கு பின்னரோ என்னை விசாரித்தார்களா என்றால் 20 லிருந்து 25 நாட்களுக்கு பின்னர் மீண்டும் போலீசார் என்னை விசாரித்தனர். அதற்கு முன்னர் என்னை விசாரிக்கவில்லை.

4) வாக்குமூலத்தில் எழுதியுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். யார் யார் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் நான் என் மனைவி, என் தம்பி, என் தாயார் ஆகியோர் மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு யார் யார் சிகிச்சையில் சேர்ந்தோம் என்றால் நானும் என் மனைவியும் சேர்ந்தோம். இருவரும் ஒரே சமயத்தில் தான் சேர்ந்தோமா என்றால் ஆமாம். சம்பவம் நடந்து எத்தனை நாட்களுக்கு பிறகு மருத்துவமனையில் சேர்ந்தேன் என்றால் சம்பவம் நடந்த அன்றே நானும் என் மனைவியும் மருத்துவமனையில் சேர்ந்தோம்.

5) எவ்வளவு நேரம் கழித்து சேர்ந்தேன் என்றால் 1/2 மணிநேரத்தில் மருத்துவமனையில் சேர்ந்தேன். சம்பவம் நடந்தவுடன் காவல் நிலையம் சென்று தகவல் சொல்லி பின்னர் அவர்கள் சொன்னதன் பேரில் மருத்துவமனையில்

சிகிச்சையில் சேர்ந்தேன். தனியார் இகோ காரில் நாங்கள் சென்று மருத்துவமனியல் சேர்ந்தோம்.

6) ஆஜர் எதிரிகள் என் சித்தப்பா என்றால் ஆமாம். எங்களுக்கும் அவர்களுக்கும் சொத்து பிரிக்காமல் உள்ளது என்றால் ஆமாம். சம்பவ இடம் பொதுவான இடமா என்றால் இல்லை அது எங்களுக்கு சொந்தமான இடமாகும். 1ம்எதிரி என்ன தொழில் செய்கிறார் என்றால் கல் உடைக்கும் தொழில் செய்கிறார்.

7) என்னை விசாரித்த அன்றே என் மனைவி, என் தம்பி, என் தாயாரை போலீசார் விசாரித்தனர். சம்பவம் நடந்த போது ஆஜர் எதிரிகள் மற்றும் நான் என் மனைவி இருந்தோம். நடராஜன் எவ்வளவு நேரம் கழித்து வந்தார்கள் என்றால் சண்டையை விலக்கி விடுவதற்காக வந்தார்கள். வந்து விலக்கிவிட்டார்கள். நாங்கள் அடித்ததாக சொல்லி 1 மற்றும் 2 எதிரிகள் காவல் நிலையத்தில் புகார் அளித்தது சம்மந்தமாக எனக்கு தெரியுமா என்றால் அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் என்னை அழைத்து விசாரித்தார்கள். அது போன்று சம்பவம் நடைபெறவில்லை என்று கூறிவிட்டோம்.

8) நான் மருத்துவமனையில் 29 நாட்கள் உள்நோயாளியாக இருந்தேன். என்னை எதிரிகள் அடிக்க பயன்படுத்திய பொருட்களை கைப்பற்றினார்களா என்றால் இல்லை. நான் அடையாளம் காட்டவும் இல்லை. அம்மாவும் தம்பியும் எவ்வளவு நேரம் கழித்து சம்பவயிடம் வந்தனர் என்றால் 1/4 மணி நேரம் கழித்து வந்தனர். யார் தகவல் சொல்லி வந்தனர் என்றால் என் மனைவி தகவல் சொன்னார்.

9) நான் சொல்வது போல், சொல்லும் நேரத்தில், சொல்லும் விதத்தில் சம்பமவ் நடைபெறவில்லை என்றாலும், நான் தான் எதிரிகளை அடித்துவிட்டு தற்போது வழக்கிற்காக தவறுதலாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் நான் எதிரிகளை அடிக்கும் போது நிலைதடுமாறி கீழே விழுந்ததால் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் எதிரிகளுக்கும் சொத்து பிரிப்பது சம்மந்தமாக எவ்வளவு நாட்களாக பிரச்சனை இருந்து வருகிறது

என்றால் 10 வருடங்களாக இருந்து வருகிறது. சொத்தை பிரித்து கொடுக்க சொல்லி எதிரிகள் மீது தகராறு செய்து பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.26 10:31:50 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 384/2024**

**Prosecution witness : அ.சா.2** **Date : 25.11.2025.**

| | |
|---|---|
| **Name : ப்ரியா** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் இந்திரா நகரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 என் கணவர். கடந்த 2021ம் வருடம் மாலை 6 மணிக்கு அ.சா.1 வீட்டிலிருந்த போது அ.சா.1ன் சித்தப்பா ஆறுமுகம் என்பவர் என் வீட்டு ஓரத்தில் உலியை வைத்து தட்டிக் கொண்டிருந்தார். என் குழந்தைக்கு உடல் நிலை சரியில்லாத நிலையில் சத்தம் கேட்டதால் வெளியே சென்று செய்யுமாறு சொன்னேன். அதற்கு அ.சா.1 இடம் எதிரிகள் என்ன ஏது என்று விசாரிக்காமல் அனைவரும் வந்து சட்டையை இழுத்து போட்டு அடித்தார்கள். எதிரி ஆறுமுகம் தெவிடியா பையா என்று சொல்லி திட்டினார். ஆறுமுகம் அ.சா.1யை அடித்த போது தடுத்த என்னை வயிற்றில் குத்தினார். நான் கீழே விழுந்துவிட்டேன்.

2) கொரடால் ஆறுமுகம் என்பவர் என் கணவரை முதுகில் அடித்து காயம் ஏற்படுத்தினார். சேட்டு என்பவர் சுத்தியால் அ.சா.1ன் வலது தோள் பட்டையில் அடித்தார். பிறகு அ.சா.1 மற்றும் நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். பிறகு அ.சா.1யை என்னையும் முதலில் எடப்பாடி மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு எதிரிகள் இருந்ததால் உள்ளே செல்லாமல் பிறகு மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள்.

ஆஜர் எதிரிகள் அடித்ததாக சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3) என் கணவர் சம்பவத்தன்றே சிகிச்சையில் சேர்ந்தார். நான் மறுநாள் தான் சேர்ந்தேன். என் கணவருடன் சம்பவத்தன்று மருத்துவமனைக்கு நான் செல்லவில்லை என்றால் ஆமாம். போலீசார் என்று எங்கு வைத்து விசாரித்தனர் என்றால் மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர். சம்பவத்திற்கு பிறகு ஒரு வாரம் கழித்து விசாரித்தனர். நீதிமன்றத்தில் சொன்னவாறு தான் போலீசாரிடமும் சொன்னேன்.

4) அ.சா.1 மருத்துவமனையிலிருந்து வந்த பின்பு காவல் நிலையத்தில் வைத்து போலீசார் விசாரித்தனர். சம்பவம் நடந்த சமயம் யார் யார் அங்கிருந்தனர் என்ற விவரம் தெரியுமா என்றால் சுமார் 50 நபர்கள் இருந்தார்கள். அவர்கள் சம்பவத்தை தடுக்க முயற்சி செய்யவில்லையா என்றால் நின்று வேடிக்கை மட்டும் தான் பார்த்தார்கள். நான் சத்தம் போட்ட பின்பு 4, 5 நபர்கள் வந்து தடுத்தார்கள்.

5) நான் என் தகப்பனாருடன் மருத்துவமனைக்கு சென்றேன். 1ம் எதிரி ஆறுமுகத்தை என் கணவர் அடித்து திட்டியதாக 2ம் எதிரி சேட்டுவின் வீட்டிற்கு சென்று ஆறுமுகம் சொல்லியதன் பேரில் எங்கள் வீட்டிலிருந்த என் கணவரின் சட்டையை பிடித்து வெளியே இழுத்து வந்து அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். இந்த விவரத்தை போலீசாரிடம் விசாரணையின் போது சொன்னேன்.

6) 1ம் எதிரி வீட்டிற்கு வெளியே உலியை அடிக்க வேண்டாமென்று சொன்ன போது சம்பவயிடத்தில் என்னையும் 1ம் எதிரியையும் தவிர வேறு யாரும் இல்லை. சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் கழித்து சம்பவம் நடந்தது என்றால் அடுத்த நாள் மாலை 2ம் எதிரி சேட்டு வந்து அடித்தார். உலியை சத்தமாக தட்ட

வேண்டாமென்று என் கணவர் 1ம் எதிரியிடம் சொன்ன தேதியிலிருந்து அடுத்த நாள் மாலை 2ம் எதிரி என் கணவரை அடித்தார் என்றால் சரிதான்.

7) போலீசார் விசாரணையில் இந்த விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல், சொல்லும் நேரத்தில், சொல்லும் விதத்தில் சம்பமவ் நடைபெறவில்லை என்றாலும், என் கணவர் தான் எதிரிகளை அடித்துவிட்டு தற்போது வழக்கிற்காக தவறுதலாக என் கணவருக்கு பரிந்து தவறுதலாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரயில்ல. அ.சா.1 க்கு ஏற்பட்ட காயங்கள் அ.சா.1 எதிரிகளை அடிக்கும் போது நிலைதடுமாறி கீழே விழுந்ததால் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கும் எதிரிகளுக்கும் சொத்து பிரிப்பது சம்மந்தமாக எவ்வளவு நாட்களாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் 10 வருடங்களாக இருந்து வருகிறது. சொத்தை பிரித்து கொடுக்க சொல்லி எதிரிகள் மீது தகராறு செய்து பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.26 10:32:00 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 384/2024**

**Prosecution witness : அ.சா.3** **Date : 25.11.2025.**

| | |
|---|---|
| **Name : கார்த்தி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து தேங்காய் உரிக்கும் வேலை செய்கிறேன். அ.சா.1 என் அண்ணன். கடந்த 2021ம் வருடம் மாலை 6 மணிக்கு என் அண்ணன் வீட்டிலிருந்த போது பொது சந்தில் என் சித்தப்பா ஆறுமுகம் என்பவர் உலியை வைத்து தட்டிக் கொண்டிருந்தார். என் அண்ணன் குழந்தைக்கு உடல் நிலை சரியில்லாத நிலையில் சத்தம் கேட்டதால் அழுது கொண்டிருந்தது. இது பற்றி என் அண்ணன் கேட்ட போது எதிரி ஆறுமுகம் தெவிடியா பையா உனக்கு எங்கடா நிலம் உள்ளது என்று சொல்லி திட்டினார். ஆறுமுகம் என்பவர் அ.சா.1 யை கீழே தள்ளிவிட்டார்.

2) கொரடால் ஆறுமுகம் என்பவர் என் அண்ணன் முதுகில் அடித்தார். சந்திரா, தங்கமணி ஆகியோர் அ.சா.1 யை கீழே தள்ளினார். பிறகு மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். யார் தகவல் சொல்லி எவ்வளவு நேரம் கழித்து சம்பவயிடம் வந்தேன் என்றால் என் அண்ணி சொல்லி நான் சம்பவயிடம் வந்தேன். 10 நிமிடம் கழித்து வந்தேன். சம்பவம் சம்மந்தமாக எப்போது விசாரித்தனர் என்றால் மருத்துவமனையில் வைத்து

விசாரித்தனர். எத்தனை நாட்களுக்கு பிறகு விசாரித்தார்கள் என்றால் 3 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். அதன் பிறகு என்னை போலீசார் விசாரிக்கவில்லை. மருத்துவமனைக்கு நான், என் அம்மா, அண்ணி, அண்ணன் ஆகியோர் சென்றோம்.

4) தனியார் ஆம்புலன்சில் சென்றோம். ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம் அங்கு முடியாது என்று சொன்னதால் நாங்கள் மேட்டூர் அரசுமருத்துவமனைக்கு சென்றோம். காவல் நிலையத்தில் தகவல் சொல்லிவிட்டு தான் சென்றோமா என்றால் ஆமாம். எவ்வளவு நேரம் கழித்து நடராஜ் வந்தார்கள் என்றால் அவர்கள் ஏற்கனவே அங்கு இருந்தார்கள்.

5) நான் சொல்வது  போல், சொல்லும் நேரத்தில், சொல்லும் விதத்தில் சம்பமவம் நடைபெறவில்லை என்றாலும், என் அண்ணன் தான் எதிரிகளை அடித்துவிட்டு தற்போது வழக்கிற்காக தவறுதலாக என் அண்ணனுக்கு பரிந்து தவறுதலாக சாட்சி  அளிக்கிறேன் என்றால் சரயில்ல. அ.சா.1 க்கு ஏற்பட்ட காயங்கள் அ.சா.1 எதிரிகளை அடிக்கும் போது நிலைதடுமாறி கீழே விழுந்ததால் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கும் எதிரிகளுக்கும் சொத்து பிரிப்பது சம்மந்தமாக எவ்வளவு நாட்களாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் 10 வருடங்களாக இருந்து வருகிறது. சொத்தை பிரித்து கொடுக்க சொல்லி எதிரிகள் மீது தகராறு செய்து பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy

Digitally signed by D.Myilswamy
Date: 2025.11.26 10:32:07 +0530

Judicial Magistrate No.II,
Mettur.